**செய்தி வெளியீடு எண்: 418** **நாள்: 11.07.2019**

**செய்தி வெளியீடு**

தமிழ்நாடு கட்டடக்கலை பொறியியல் (B.Arch) மாணாக்கர்கள் சேர்க்கை **2019–20** விளம்பர அறிவிக்கை **14.07.2019** அன்று வெளியிடப்பட உள்ளது.

கட்டடக்கலை பொறியியல் (B.Arch) கல்வி பயில விரும்பும் மாணாக்கர்கள் பொறியியல் கல்வி சேர்க்கைக்கு வீட்டில் இருந்தே இணையதளம் வாயிலாக பதிவு செய்யலாம்.

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரிகள், பல்வகை தொழில் நுட்பக் கல்லூரிகள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை உள்ளடக்கிய 46 பொறியியல் சேர்க்கை உதவி மையங்கள் மாணாக்கர்களுக்கு இணைய தளம் மூலம் பதிவு செய்ய வழிகாட்டுதல் வழங்கப்படும்.

மாணாக்கர்கள், **14**.07.2019 அன்று வெளியிடப்பட உள்ள அறிவிக்கையினை தொடர்ந்து, விண்ணப்பங்களை இணையதளம் வாயிலாக 15.07.2019 - ம் தேதி முதல் **26.07.2019 –** ம் தேதி வரை பதிவு செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேற்படி, மாணாக்கர்கள் இணையதளம் வாயிலாக விண்ணப்பங்களை பதிவு செய்வதற்கு 12 நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, ஜுலை மாதம் இறுதி வாரத்தில் சான்றிதழ் சரிபார்த்தல் பணி **46** பொறியியல் சேர்க்கை உதவி மையங்களில் நடைபெறும். அதன்பின் இணையதள அட்டவணைப்படி கலந்தாய்வு நடைபெறும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**